# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

***2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி***

*(2023.08.31 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## சேர்பெறுமதி வரி (திருத்தம்)

***2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 36.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2** : இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) *2002* ஆம் ஆண்டின் *14* ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் *2* ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, எளிமையாக்கப்பட்ட சேர்பெறுமதி வரித் திட்டத்தை அகற்றுவதாகும்.

**வாசகம் *3*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் *22* ஆம் பிரிவைத் திருத்துவதுடன் *2* ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தங்களின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் *4*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் *71* ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப் பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, சேர்பெறுமதி வரி மீளளிப்பு நிதியத்துக்கு வரவு வைக்கப்படவேண்டிய வரிவீதத்தை அதிகரிப்பதாகும்.

**வாசகம் 5** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் *83* ஆம் பிரிவைத் திருத்துவதுடன் *2* ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தங்களின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 6** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையின் பாகம் II ஐ, குறித்தசில சேபெவ விலக்களிப்புகளை அகற்றுவதற்கெனத் திருத்துவதாகும்.

ச.வ.- ஓ. 56/2022

**2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின்          ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்

**2.** (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில், ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியில், "உட்பந்திகள் (இ) அல்லது (ஈ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட பண்டங்கள் அல்லது சேவைகள் தவிர்ந்த பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குவதன் மீது,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2024, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக உட்பந்திகள் (இ) அல்லது (ஈ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட பண்டங்கள் அல்லது சேவைகள் தவிர்ந்த பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குவதன்மீது," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் முதலாம் காப்புவாசகத்தின் (ஊ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(ஊ) ஏற்றுமதிக்கான தைத்த ஆடைகளின் உற்பத்தியினது நோக்கத்துக்காக ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட முறையில் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்திடம் பதிவுசெய்யப்பட்டவரான எவரேனுமாளினால் இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் நெய்யப்பட்ட துணிவகை அல்லது துணையுறுப்புகள்.";

(ஆ) அவ்வுட்பிரிவுக்கான இரண்டாம் காப்புவாசகத்தின் (அ) என்னும் பந்தியில் -

(i) அதன் (vi) ஆம் விடயத்தில், "இறக்குமதி செய்யப்பட்ட எவையேனும் பண்டங்கள் மீது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2024, சனவரி 1 ஆம் தேதிக்குமுன்னர் இறக்குமதிசெய்யப்பட்ட எவையேனும் பண்டங்கள்மீது" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ii) அதன் (vii) ஆம் விடயத்தில், "அத்தகைய ஆளினால் இறக்குமதி செய்யப்பட்ட அத்தகைய பொறித்தொகுதி அல்லது எந்திரத்தொகுதிமீது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2024, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் அத்தகைய ஆளினால் இறக்குமதி செய்யப்பட்ட அத்தகைய பொறித்தொகுதி அல்லது எந்திரத்தொகுதிமீது" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் இரண்டாம் காப்பு வாசகத்துக்கான (உ) என்னும் பந்தியில், "2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து ஆனால் 2024, சனவரி 1 ஆந்தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவுக்கான முதலாவது காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"ஆயின், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளும்,-

(அ) இந்தத் (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னரான காலப்பகுதிக்காக, இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் பாகம் II இன் (ஊ) என்னும் பந்தியின் (i) ஆம் விடயத்திலும் (ii) ஆம் விடயத்திலும்; அல்லது

(ஆ) இந்தத் (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதற்குப்பின்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக, இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் பாகம் III இன் (ஆ) என்னும் பந்தியின் (xxv) ஆம் விடயத்திலும் (xxvi) ஆம் விடயத்திலும்,

குறித்துரைக்கப்பட்ட விலக்களிப்புக்களும் எவ்வாறிருப்பினும், 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் அடையாளங்காணப்பட்ட ஏதேனும் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கு அல்லது இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் பாகம் II இன் (ஊ) என்னும் பந்தியின் (ii) ஆம் விடயத்தின்கீழ் அல்லது இச்சட்டத்துக்கான

முதலாம் அட்டவணையின் பாகம் III இன் (ஆ) என்னும் பந்தியின் (xxvi) ஆம் விடயத்தின்கீழ் அமைச்சரினால் அடையாளங்காணப்பட்ட ஏதேனும் விசேட கருத்திட்டத் துக்குப் பண்டங்களை அல்லது சேவைகளை வழங்கு வதில் ஈடுபட்டுள்ள எவரேனும் பதிவுசெய்யப்பட்ட ஆள், அத்தகைய கருத்திட்டங்களுக்குச் செய்யப்பட்ட பண்டங் களின் அல்லது சேவைகளின் வழங்குகையுடன் சம்பந்தப் பட்ட பண்டங்களின் அல்லது சேவைகளின் கொள்வனவு மீதான உள்ளீட்டு வரியை உரிமைகோருவதற்கு அனு மதிக்கப்படலாம்.";

(3) அப்பிரிவின் (10) ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவுக்கான இரண்டாம் காப்புவாசகத் தின் (ii) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(ii) 2024, சனவரி 1 ஆந்தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக வழங்குந ரொருவரினால் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் (i) முதல் (vii) வரையிலான விடயங்களிற் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனுமா ளுக்குச் செய்யப்பட்ட வழங்கல்களாக வுள்ளவையும், இச்சட்டத்தின்கீழ் அவற் றின்மீதான வரி பின்போடப்பட்டவையு மான வழங்கல்கள்.";

(ஆ) அவ்வுட்பிரிவுக்கான மூன்றாம் காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"ஆயின், மேலும், -

(அ) இச்சட்டத்துக்கான முதலாம் அட்ட வணையின் பாகம் II இன் (ஊ)

என்னும் பந்தியின் (i) ஆம் விடயத்திலும் (ii) ஆம் விடயத்திலும் குறித்துரைக்கப்பட்ட, இந்தத் (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னரான காலப்பகுதிக்காக; அல்லது

(ஆ) இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் பாகம் III இன் (ஆ) என்னும் பந்தியின் (xxv) ஆம் விடயத்திலும் (xxvi) ஆம் விடயத்திலும் குறித்துரைக்கப்பட்ட, இந்தத் (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதற்குப் பின்னரான காலப்பகுதிக்காக,

2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் அடையாளங்காணப்பட்ட ஏதேனும் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கு அல்லது இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் பாகம் II இன் (ஊ) என்னும் பந்தியின் (ii) ஆம் விடயத்தின்கீழ் அல்லது இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் பாகம் III இன் (ஆ) என்னும் பந்தியின் (xxvi) ஆம் விடயத்தின்கீழ் அமைச்சரினால் அடையாளங்காணப்பட்ட ஏதேனும் விசேட கருத்திட்டத்துக்குப் பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குகின்ற எவரேனுமாளுக்கு இவ்வுட்பிரிவின்கீழ் அனுமதிக்கத்தக்க உள்ளீட்டு வரியை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக, அத்தகைய கருத்திட்டத்தின் இயைபான காலப்பகுதிக்காக வழங்குநர்களின் வழங்குகையின் பெறுமதியானது,

எந்த வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகையின்மீது வெளியீட்டு வரி கணிப்பீடுசெய்யப்படுகின்றதோ அந்த வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகையொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ii)ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவைத் திருத்துதல்*

"(ஆ) 2014, சனவரி 1 ஆந்தேதியிலிருந்து அல்லது அதற்குப் பின்னரான ஆனால் 2024, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்கு ஆறு சதவீதம்;

(இ) 2024, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னரான ஏதேனும் காலப்பகுதிக்கு பத்து சத வீதம்.".

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துதல்*

(1) "உற்பத்தி" என்னும் சொல்லமைப்பை உடனடுத்துப் பின்வரும் சொல்லமைப்பை உட்புகுத்துவதன்மூலமும்:-

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் உறுப்புரை 44 அல்லது 45 இன் நியதிகளின்படி நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்;";

(2) "வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி" என்ற சொல்லமைப்பில் -

(அ) அச்சொல்லமைப்பின் (2) ஆம் பந்தியில், "2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப்

பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப் பகுதிக்காக" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் ஆனால் 2024, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அச்சொல்லமைப்பின் (2) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(3) 2024, சனவரி 1 ஆந் தேதியன்றுள்ள அல்லது அதற்குப் பின்னரான ஏதேனும் காலப் பகுதிக்காக-

(அ) (i) பூச்சியம் வீதமிடப்பட்ட வழங்குகைகளை எவரேனுமாள் செய்யுமிடத்து;

(ii) எவரேனுமாள் ஒரு தொழிலைத் தொடங்கியுள்ளவிடத்து அல்லது ஒரு கருத்திட்டத்தை ஆரம்பித்துள்ளவிடத்து மற்றும் இச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்குப் பொறுப்பேற்கின்றவிடத்து,

ஒரு மாதகாலப்பகுதியொன்று;

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்படாத அல்லது ஆணையாளர் தலைமையதிபதியின் அங்கீகாரத்தின் மீது காலாண்டு விபரத்

திரட்டுக்களைச் சமர்ப்பிப்பதற்கு விருப்புத்தெரிவிக்கின்றவொரு பதிவுசெய்யப்பட்டவோர் ஆள்தொடர்பில் ஒவ்வோராண்டினதும் முறையே சனவரி முதலாம் நாளன்று, ஏப்பிறல் முதலாம் நாளன்று, யூலை முதலாம் நாளன்று மற்றும் ஒற்றோபர் முதலாம் நாளன்று தொடங்குகின்ற மூன்று மாதகாலப்பகுதியொன்று.".

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை, அதன் பாகம் II இல் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பாகத்தின் தலைப்பில், "2004, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக (அட்டவணைக்கான அடுத்துப்பின்னரான திருத்தங்களில் குறித்துரைக்கப்பட்ட பயனுறும் தேதிகளுக்கமைய),", என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2004, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் தொடங்குகின்ற ஆனால் சட்டமூலமானது பாராளுமன்றச் சட்டமொன்றாக வருகின்ற மாதத்தின் கடைசி நாளன்று அல்லது அதற்குமுன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக (அட்டவணைக்கான அடுத்துப் பின்னரான திருத்தங்களில் குறித்துரைக்கப்பட்ட பயனுறும் தேதிகளுக்கமைய)," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பாகத்தின் பந்தி (க) என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகத்தைச் சேர்ப்பதன்மூலமும்:-

"பாகம் III

சட்டமூலமானது எம்மாதத்தில் பாராளுமன்றச் சட்டமொன்றாக வருகின்றதோ அம்மாதத்தை உடனடுத்துப்பின்வரும் மாதத்தின் முதலாவது நாளன்று அல்லது அதற்குப்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக –

| | | |
|---|---|---|
| (அ) | பின்வருவனவற்றின் வழங்குகை அல்லது இறக்குமதி :- | |
| | (i) | கோதுமை மற்றும் கோதுமை மா; |
| | (ii) | குழந்தைகள் பால்மா; |
| | (iii) | அவற்றின் முடிவுப்பாவனை சிகிச்சைசார் அல்லது நோய்த்தடுப்புப் பயனுக்கு மட்டுப்படுத்தப்படுகின்றவையும் ஒரு வைத்தியரின் மருந்துப்பட்டோலையின்மீது கொள்வனவு செய்யப்பட்டவையுமான (ஒப்பனைப் பொருட்கள் தவிர்ந்த) மருந்தாக்கற்பொருட்கள், ஔடதங்கள் மற்றும் அத்தகைய பொருட்களின் அல்லது ஔடதங்களின் தயாரிப்புக்கான அல்லது உற்பத்திக்கான மூலப் பொருட்கள்; |
| | (iv) | அவற்றின் முடிவுப்பாவனை சிகிச்சைசார் அல்லது நோய்த்தடுப்புப் பயனுக்கு மட்டுப்படுத்தப்படுகின்றவையும், ஏதேனும் நோயினால் பீடிக்கப்பட்ட ஆட்களுக்கு மருத்துவச் சிகிச்சை வழங்குவதற்கு, விடயத்துக்கேற்ப, 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஆயுர்வேதச் சட்டத்தின்கீழ் அல்லது 2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, ஓமியோபதிச் சட்டத்தின்கீழ் ஆயுர்வேத வாகடக நூலைச் சேர்ந்தவையும் ஒரு பதிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத மருத்துவத்தொழிலரின் அல்லது பதிவுசெய்யப்பட்ட ஓமியோபதிசார் மருத்துவத்தொழிலரின் மருந்துப் பட்டோலையின்மீது கொள்வனவு செய்யப்படுகின்றவையுமான ஆயுர்வேத அல்லது ஓமியோபதிசார் தயாரிப்புகள், (ஒப்பனைப்பொருட்களின் தயாரிப்புகள் தவிர்ந்த) ஆயுர்வேத அல்லது ஓமியோபதிசார் தயாரிப்புகள் அல்லது 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஆயுர்வேதச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆயுர்வேத ஆணையாளரின் விதப்புரையுடன், சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டுமுறைமை இலக்கங்களின்கீழ் வகுப்பாக்கஞ்செய்யப்பட்ட யூனானி அல்லது சித்தத் தயாரிப்புகள்; |
| | (v) | சுத்திகரிக்கப்படாத பெற்றோலிய எண்ணெய், மண்ணெண்ணெய், திரவப் பெற்றோலிய வாயு, வான்செலவு |

| | | |
|---|---|---|
| | | எரிபொருள், பெற்றோல், தீசல், கப்பல்களுக்கான எண்ணெய் அல்லது சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப்பண்டங்களின் விவரண இலக்கம் 2710.19.60 இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட எரிபொருள் எண்ணெய்; |
| | (vi) | செயற்கைப் பக்கவுறுப்பு, ஊன்றுகோல்கள், சக்கர வண்டிகள், செவிப்புல உதவுகருவிகள், ஒரு குறைபாட்டை அல்லது இயலாமையை ஈடுசெய்வதற்கு மனிதவுடலில் அணியப்படும் அல்லது கொண்டு செல்லப்படும் அல்லது பதிக்கப்படும் அத்தகைய உதவிகருவிகளுக்கான துணையுறுப்புகள் அல்லது துணைக்கருவிகள், குருடர்களுக்கான வெண்பிரம்புகள், பிறேள் தட்டச்சுப் பொறிகளும் பாகங்களும், பிறேள் எழுதும் கடுதாசிகள், பிறேள் எழுதும் பலகைகள் மற்றும் அந்நோக்கத்துக்காகச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது, அத்தகைய ஆட்களினால் கோரப்பட்ட நிவாரணத்தின் அளவைக் கவனத்துட்கொண்டு அமைச்சரினால் அங்கீகரிக்கப்படுகின்றவையும் இயலாமைக்குட்பட்ட ஆட்களினால் பயன்படுத்தப்படுகின்றவையுமான வேறெவையேனும் பொருட்கள்; |
| | (vii) | சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்களின்கீழ் வகுப்பாக்கஞ்செய்யப்பட்ட பகுதியளவில் இழுவைவண்டிகளுக்கான கமத்தொழில் உழவு இயந்திரங்களும் வீதி உழவு இயந்திரங்களும்; |
| | (viii) | சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டுமுறைமை இலக்கங்களின்கீழ் வகுப்பாக்கஞ் செய்யப்பட்ட கமத்தொழில் எந்திரத்தொகுதி, மண்வெட்டிகள், மண்வாரிகள், உரம், ஆர்ட்டீமியா மீனின் முட்டைகள் மற்றும் தூள்நிலக்கரி பாசி; |
| | (ix) | கமத்தொழில் விதைகள், கமத்தொழில் தாவரங்கள், இறால் தீனியும் விலங்குத்தீனியும் உட்பட ஆனால் பறவைத்தீனி நீங்கலாகக் கூனிறால் தீனி; |
| | (x) | சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்களின்கீழ் அடையாளங்காணப்பட்டவாறு புடவைக் கைத்தொழிலுக்காகப் பயன்படுத்தப்பட்ட நூலிழை; |

| | | |
|---|---|---|
| | (xi) | சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்களின்கீழ் அடையாளங்காணப் பட்டவாறு கைத்தறிக் கைத்தொழிலுக்காகப் பயன்படுத் தப்பட்ட சாயங்கள்; |
| | (xii) | சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரண இலக்கங்களின்கீழ் அடையாளங் காணப்பட்டவாறு சூரியசக்தி வலுவைப் பிறப்பிப்பதற்காகச் சூரியவெப்பத் தொகுதி அலகுகள், துணையுறுப்புகள் அல்லது சூரியவெப்ப வீட்டு முறைமை; |
| | (xiii) | ஏதேனும் மோட்டார் வாகனம் இறக்குமதிசெய்யப்படு வதன்மீது 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் உற்பத்தித்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) தீர்வைக்கு உட்பட்டதும் சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக் கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு இலக்கங்களின்கீழ் அடையாளங்காணப் பட்டதுமான அத்தகைய வாகனம் அல்லது ஏதேனும் மோட்டார் வாகனத்தின் உற்பத்தியின்மீது அதே தீர்வைக்கு உட்பட்டதான அத்தகைய ஏதேனும் வாகனம். |
| (ஆ) | பின்வருவனவற்றின் வழங்குகை – | |
| | (i) | எவரேனுமாளினால் அல்லது பங்காண்மையினால் வழங்கப்பட்ட கல்விச்சேவைகள்; |
| | (ii) | (வான் போக்குவரத்து, நீர்ப்போக்குவரத்து அல்லது சுற்றுலாப் பயணிகளை இடம்பெயர்த்தல், சுற்றுலா உல்லாசப் பயணங்கள் மற்றும் வாடகைவண்டிச் சேவைகள் தவிர), பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள்; |
| | (iii) | விநியோகிப்புப்பட மின்சாரம்; |
| | (iv) | எவரேனும் நிறுவனத்தினால் அல்லது ஆளினால் அடக்கங்களும் தகனங்களும் தொடர்பான சேவைகள்; |
| | (v) | பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் குடிவரவுக் கருமபீடத்துக்கப்பால் அமைந்துள்ள ஒரு சிற்றுண்டிச்சாலையிலான சேவைகள்; |

| | | |
|---|---|---|
| | (vi) | 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டத்தின் ஏற்பாடுகள் எந்த அரசின் அல்லது எந்த ஒழுங்கமைப்பின் தூதரகத்துக்கு ஏற்புடையதாகின்றனவோ அந்த ஏதேனும் அரசின் அல்லது அந்த ஏதேனும் ஒழுங்கமைப்பின் தூதரகத்துக்கான, அல்லது அத்தகைய நன்மைகளுக்கு உரித்துள்ளவரும் அத்தகைய தூதரகத்தை அல்லது ஒழுங்கமைப்பைச் சேர்ந்தவருமான எவரேனும் இராஜதந்திர ஆளணியினருக்கான பண்டங்களும் சேவைகளும்:<br><br>ஆயின், இலங்கையிலிருந்தான அவர்களின் சரிநேர் அலுவலர்களுக்குப் பரஸ்பர நன்மைகள் கிடைக்கக் கூடியனவாகவுள்ளதுடன் ஆணையாளர் தலைமை யதிபதியினால் அத்தகையதாக அடையாளங்காணப் படுதலும் வேண்டும்; |
| | (vii) | அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டவாறு, இயற்கை அல்லது மனிதப் பேரழிவுகளினால் விளைவிக்கப்பட்ட திடீர் இடர்ப்பாட்டின் நிவாரணத்துக்காக அல்லது தேசிய பொருளாதாரத்தின் நலனைக் கருத்திற் கொண்டு ஏதேனும் செயற்பாட்டுக்கு வெளிநாட்டு ஒழுங்கமைப்புகளினால் நேரடியாக நிதியளிக்கப்பட்ட பண்டங்கள் அல்லது சேவைகள்; |
| | (viii) | பின்வரும் நிதிச்சேவைகள்:- |
| | | (அ) ஏதேனும் நடப்பு, வைப்பு அல்லது சேமிப்புக் கணக்கைத் தொழிற்படுத்துதல்; |
| | | (ஆ) நாணயத்தைப் பரிமாற்றுதல்; |
| | | (இ) ஏதேனும் குறிப்பு, கொடுப்பனவுக் கட்டளை, காசோலை அல்லது கடன்பத்திரத்தை வழங்குதல், கொடுப்பனவுசெய்தல், சேகரித்தல் அல்லது அதன் சொத்தாண்மையைக் கைமாற்றுதல்; |
| | | (ஈ) எவரேனுமாளிடமிருந்து சேர்மதியான பணத்திலான ஏதேனும் அக்கறையாகவுள்ள அல்லது அது செலுத்தப்படுவதற்கான உரிமையாகவுள்ள, ஏதேனும் தனிசுப் பிணைப்பொறுப்பை வழங்குதல், குறித்தொதுக்குதல், அதன் சொத்தாண்மையைக் கைமாற்றுதல், அதனை மீளப்பெறுதல் ஏற்றுக்கொள்ளுதல் அல்லது புறக்குறிப்பிடுதல்; |

| | | | | |
|---|---|---|---|---|
| | | (உ) | ஏதேனும் ஒப்புரவுப் பிணைப்பொறுப்பை, தனிசுப் பிணைப்பொறுப்பை அல்லது பங்கு பற்றுகைசார் பிணைப்பொறுப்பை வழங்குதல், குறித்தொதுக்குதல் அல்லது அதன் சொத்தாண்மையைக் கைமாற்றுதல்; | |
| | | (ஊ) | ஏதேனும் ஒப்புரவுப் பிணைப்பொறுப்பின், தனிசுப் பிணைப்பொறுப்பின் அல்லது பங்கு பற்றுகைசார் பிணைப்பொறுப்பின் வழங்குதலை ஒப்புறுதியீடு செய்தல் அல்லது கீழ் ஒப்புறுதியீடு செய்தல்; | |
| | | (எ) | ஏதேனும் கடனை, முற்பணத்தை அல்லது வரவை வழங்குதல்; | |
| | | (ஏ) | பின்வருவனவற்றை வழங்குதல்- | |
| | | | (i) | வாடகைக் கொள்வனவு நிபந்தனையுடனான விற்பனையில் அல்லது கடன் விற்பனை உடன்படிக்கையில் தவணைப்பணக் கடன் நிதி வசதி; இவ்வசதிக்காக ஒரு தனிவேறான விதிப்பனவு செய்யப்படுவதுடன் வழங்குகையானது எவ்வாளுக்குச் செய்யப்படுகின்றதோ அவ்வாளுக்கு வெளிக்காட்டவும்படுகின்றது; |
| | | | (ii) | ஏதேனும் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் அல்லது நிபந்தனையுடனான விற்பனை உடன்படிக்கையின் தேதியன்று உள்ளவாறாகப் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்காக இலங்கையில் பயன்படுத்தப்பட்டுள்ள அத்தகைய உடன்படிக்கையின் கீழான பண்டங்கள்; |
| | | | (iii) | ஏதேனும் நிதிக்குத்தகை உடன்படிக்கையின் கீழான குத்தகை வசதிகள்; |
| | | (ஐ) | ஆயுட்காப்புறுதி, "அக்ரஹாராக்" காப்புறுதி அத்துடன் பயிர் கால்நடைக் காப்புறுதி; | |
| | | (ஒ) | அமைச்சரின் ஒருப்பாட்டுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டவாறாக அத்தகைய வங்கியின் மீளக்கட்டமைத்தல் திட்டத்தின் | |

| | | |
|---|---|---|
| | | அல்லது வேறு திட்டத்தின் நியதிகளின்படி வேறெவரேனுமாளுக்கு அத்தகைய கடன்களைக் கைமாற்றல் என்றவகையாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றின் செயல்நிறை வேற்றமற்ற கடன்களைக் கைமாற்றுதல்; |
| | (ix) | வைத்தியசாலை அறைக்கட்டணங்கள் தவிர்ந்த அத்தகைய கவனிப்பை வழங்குகின்ற மருத்துவ நிறுவனங்களினால் அல்லது உயர்தொழில்ரீதியில் தகைமைபெற்ற ஆட்களினால் வழங்கப்பட்ட எல்லா உடனலச் சேவைகளும்; |
| | (x) | விற்பனைக்கு இசைவாக்குதல்தவிர 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப்பண்ட அறவீட்டுச் சட்டத்தின்கீழ் விசேட வியாபாரப்பொருள் அறவீட்டுக்கு அமைந்த இறக்குமதிசெய்யப்பட்ட ஏதேனும் பொருள் பதனிடுகையின்றி விற்பனைசெய்யப்படு கின்றதென்ற நிபந்தனைக்கமைய அத்தகைய பொருட் கள்; |
| | (xi) | 1978 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, டவர் மண்டபத் தியேட்டர் மன்றச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட டவர் மண்டபத் தியேட்டர் மன்றத்தினாலான அல்லது 1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, மத்திய பண்பாட்டு நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பண்பாட்டு நிதியத்தினாலான சேவைகள்; |
| | (xii) | கடல் மணல்; |
| | (xiii) | உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட கைத்தறிப்புடவைகள்; |
| | (xiv) | அரிசியும், அரிசி மாவும் பாணும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அளவுவரை அத்தகைய உற்பத்திப் பொருட்கள்; |
| | (xv) | இலங்கையில் தயாரிக்கப்பட்ட பதனிடப்படாத கமத் தொழில், தோட்டத்தொழில் அல்லது மீன்பிடித்தொழில் உற்பத்திப்பொருட்கள்; |
| | (xvi) | தேயிலைத்தொழிலுக்காகப் பயன்படுத்தப்பட்டதும் தேயிலை எந்திரத்தொகுதியொன்றாக 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேயிலைச் சபையினால் அடையாளங்காணப்பட்டது மான உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட எந்திரத் தொகுதி; |

| | | |
|---|---|---|
| | (xvii) | *அறுவைமருத்துவத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட அறுவைமருத்துவ மென் துணிவலை;* |
| | (xviii) | *நாட்டினுள் நுழைவிடத்தில் இறக்குமதிசெய்யப்படுவதன்மீது வேறேதேனும் வரி விதிக்கப்படுவதற்குப் பதிலாக, 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட வர்த்தமானி அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு பணிப்பாளர் தலைமையதிபதியினால் சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப்பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டுமுறைமை இலக்கங்களின்கீழ் வகுப்பாக்கஞ்செய்யப்பட்ட குறிப்பிட்டவொரு வீதத்திலான ஆயவரிக்கு அமைந்ததாகவுள்ள நெய்யப்பட்ட துணிவகை;* |
| | (xix) | *இச்சட்டத்தின்கீழான வரியின் நோக்கத்துக்காக, வர்த்தகத் திணைக்களத்தினாலான, இலங்கை முதலீட்டுச்சபையினாலான அல்லது இலங்கைத் துறைமுக அதிகார சபையினாலான சேவைகள் எவரேனும் ஏற்றுமதியாளருக்கு அல்லது பூச்சியம் வீதமிடப்பட்ட சேவைகளாகவுள்ள சேவைகளின் வழங்குநருக்கு வழங்கப்படும் அளவுவரை அத்தகைய சேவைகள்;* |
| | (xx) | *இலங்கையிலுள்ள ஆளொருவரினால், இலங்கைக்கு வெளியேயுள்ள வேறெவரேனுமாளினால் நுகரப்படுவதற்கு அல்லது பயன்படுத்தப்படுவதற்கு, அதற்கான கொடுப்பனவு இலங்கை ரூபாக்களில் இலங்கைக்கு வெளியே செய்யப்படும் அத்தகைய வேறு ஆளுக்கு இலங்கையிலுள்ள ஆளொருவரினாலான சேவைகள்;* |
| | (xxi) | *ஏற்றுமதி அபிவிருத்தித் தள்ளுபடியாக ஏற்றுமதி அபிவிருத்தி நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டதாகவுள்ள ஏதேனும் பணத்தொகை;* |
| | (xxii) | *ஏதேனும் நூலிழை, நெய்யப்பட்ட துணிவகை அல்லது தைத்த ஆடைகளின் தரம், பண்பு அல்லது பெறுமதியைச் சீராக்குவதனை விளைவிக்கின்ற சேவைகள், அத்தகைய உற்பத்திப்பொருட்களின் ஏற்றுமதியாளர்கள் தவிர்ந்த ஆட்களுக்கு வழங்கப்படும் அளவுவரை அத்தகைய சேவைகள்;* |
| | (xxiii) | *மூப்பியல் மருத்துவத்துறைசார்ந்த சேவைகளும் சிறுவர் கவனிப்புச்சேவைகளும்;* |

| | | |
|---|---|---|
| | (xxiv) | உள்நாட்டுத் தொலைத்தொடர்புத் தொழிற்படுத்துநர்களுக்கு "எக்ஸ்டேர்னல் கேட்வே தொழிற்படுத்துநர்களினால்" வழங்கப்பட்ட சர்வதேசத் தொலைத் தொடர்புச் சேவைகள்; |
| | (xxv) | 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டச் சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக அடையாளங் காணப்பட்ட ஏதேனும் கருத்திட்டத்துக்கான பண்டங்கள் அல்லது சேவைகள்; |
| | (xxvi) | (அ) அவற்றின் மீதான வரி அரசாங்கத்தினால் பொறுக்கப்படுகின்ற, நாட்டுக்கான பொருளாதார நன்மையைக் கவனத்துட் கொண்டு, அமைச்சரினால் அடையாளங் காணப்பட்ட ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்துக்கான பண்டங்கள் அல்லது சேவைகள்; அல்லது<br><br>(ஆ) அந்தந்த அரசாங்க அமைச்சின் செயலாளரினது விதப்புரையின் மீது அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதும் அரசாங்க அமைச்சுகளுக்கு நேரடியாக வெளிநாட்டுக் கடன்கள் அல்லது நன்கொடைகளினூடாக நிதியளிக்கப்பட்டதுமான ஏதேனும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கான பண்டங்களும் சேவைகளும்; |
| | (xxvii) | (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியினாலான பண்டங்கள் அல்லது சேவைகள்; |
| | (xxviii) | திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்தினூடாக ஒழுங்கேற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் கடனிலிருந்து பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்பட்ட நிதிகளிலிருந்து கட்டணமின்றி, இலங்கை அரசாங்கத்தின் சார்பில் ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் எவையேனும் சேவைகளை வழங்கும் அளவுவரை அவற்றினாலான அத்தகைய சேவைகள்; |
| | (xxix) | வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுசெய்யப் படுவதற்காக, தீர்வையற்ற கடைகளுக்கு உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட பண்டங்கள்; |

| | | |
|---|---|---|
| | (xxx) | இறக்குமதிசெய்யப்பட்டிருப்பின், இறக்குமதியின் மீது விலக்களிக்கப்பட்டிருக்கக்கூடிய எவையேனும் பண்டங்கள் (உள்நாட்டில் வழங்கப்பட்டவை). |
| (இ) | பின்வருவனவற்றின் இறக்குமதி – | |
| | (i) | (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 107 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட பயணிகளின் பயணப்பொதி (விலக்களிப்புகள்) ஒழுங்குவிதிகளின் கீழ் தீர்வையற்ற அனுமதிக்கு உரித்துள்ள ஏதேனும் பொருள் அல்லது (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் அட்டவணை அ இல் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக ஒரு மீள் இறக்குமதிச் சான்றிதழின் மீது தீர்வையற்ற அனுமதியளிக்கப்பட்ட ஏதேனும் பொருள் அல்லது கப்பற் களஞ்சியப்பொருட்களாகப் பயன்படுத்தப்படுவதற்காகப் பிணையம்புறத்து அனுமதியளிக்கப்பட்ட ஏதேனும் பொருள்; |
| | (ii) | (அ) கண்காட்சிப் பொருட்களாக அல்லது ஏதேனும் தொழினுட்பச் செய்துகாட்டுகையிலான பொருட்களாகப் பயன்படுத்தப்படவுள்ளவையும், விடயத்துக்கேற்ப, அத்தகைய கருத்திட்டம், கண்காட்சி அல்லது செய்துகாட்டுகை பூர்த்தியானபின்னர் மீள ஏற்றுமதி செய்யப்படுகின்றவையுமான பண்டங்கள், அல்லது |
| | | (ஆ) கருத்திட்டங்களில் பயன்படுத்தப்படுவதற்கு இறக்குமதிசெய்யப்படுகின்றவையும், கருத்திட்டம் பூர்த்தியானபின்னர் மீள ஏற்றுமதி செய்யப்படுகின்றவையுமான பொறித்தொகுதி, எந்திரத் தொகுதி அல்லது சாதனங்கள்;<br><br>அத்துடன் அவை தொடர்பில் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவிற்கான இரண்டாம் காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியின் நியதிகளின்படி வரியானது பின்போடப்படுகின்றது; |
| | (iii) | சுங்க நோக்கங்களுக்காகக் குறித்துரைக்கப்பட்ட ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப்பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டுமுறைமை இலக்கங்களின் கீழ் அடையாளங்காணப்பட்ட வானூர்தி எந்திரங்கள் அல்லது வானூர்தி உதிரிப்பாகங்கள்; |
| | (iv) | மின்சாரத்தைப் பிறப்பிப்பதற்காக இலங்கை மின்சாரச்சபைக்கு வழங்கப்படவேண்டிய இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினாலான இரசாயனக் கற்பூரத்தைலம்; |

| | | |
|---|---|---|
| | (v) | (அ) அவற்றின்மீதான வரி அரசாங்கத்தினால் பொறுக்கப்படுகின்ற, நாட்டுக்கான பொருளாதார நன்மையைக் கவனத்துட்கொண்டு, அமைச்சரினால் அடையாளங்காணப்பட்ட ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்துக்கான பண்டங்கள்; அல்லது<br><br>(ஆ) கருத்திட்ட நடைமுறைப்படுத்துகைக் காலப்பகுதியின்போது, அவற்றின்கண் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமாக அடையாளங்காணப்பட்ட ஒரு கருத்திட்டத்துக்கான பண்டங்கள்; அல்லது<br><br>(இ) அந்தந்த அரசாங்க அமைச்சின் செயலாளரினது விதப்புரையின்மீது அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டவாறு, இலங்கை அரசாங்கத்தின் ஏதேனும் அமைச்சுக்கு நேரடியாக வெளிநாட்டுக் கடன்கள் அல்லது நன்கொடைகளினூடாக நிதியளிக்கப்பட்ட ஏதேனும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கான பண்டங்கள்; |
| | (vi) | 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டத்தின் ஏற்பாடுகள் எந்த அரசின் அல்லது எந்த ஒழுங்கமைப்பின் தூதரகத்துக்கு ஏற்புடையதாகின்றனவோ அந்த ஏதேனும் அரசின் அல்லது அந்த ஏதேனும் ஒழுங்கமைப்பின் தூதரகத்துக்கான அல்லது அத்தகைய நன்மைகளுக்கு உரித்துள்ளவரும் அத்தகைய தூதரகத்தை அல்லது ஒழுங்கமைப்பைச் சேர்ந்தவருமான எவரேனும் இராஜதந்திர ஆளணியினருக்கான பண்டங்கள்; ஆயின், இலங்கையிலிருந்தான சரிநேர் அலுவலர்களுக்குப் பரஸ்பர நன்மைகள் கிடைக்கக்கூடியனவாகவுள்ளதுடன் ஆணையாளர் தலைமையதிபதியினால் அத்தகையதாக அடையாளங்காணப்படுதலும் வேண்டும்; |
| | (vii) | அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டவாறு, இயற்கை அல்லது மனிதப் பேரழிவுகளினால் விளைவிக்கப்பட்ட திடீர் இடர்ப்பாட்டின் நிவாரணத்துக்காக அல்லது தேசிய பொருளாதாரத்தின் நலனைக் கருத்திற்கொண்டு ஏதேனும் செயற்பாட்டுக்கு ஏதேனும் வெளிநாட்டு ஒழுங்கமைப்பினாலான அல்லது அத்தகைய ஒழுங்கமைப்பிலிருந்தான நிதிகளிலிருந்தான பண்டங்கள்; |

| | |
|---|---|
| (ஈ) | வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுசெய்யப்படுவதற்காக, தீர்வையற்ற கடைகளில் பண்டங்களை இறக்குமதிசெய்தலும் வழங்குதலும்.". |

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**7.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.